**பத்தேகம பிரதேச சபை - 2022**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பத்தேகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பத்தேகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நூலக புத்தகக் கொள்வனவு ரூபா 270,893 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பில் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாத 52 நிர்மாண வேலைக்காக ரூபா 9,815,376 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 26 கடை வாடகையாளர்களிடம் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 19,786,853 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான காணிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 24,600,731 இற்கான மூலதனச் செலவுகள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 673,580 தொகைக்கான அனுமதிப்பத்திர கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) முன்னைய ஆண்டின் போது ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 258,375 இற்கான ஊழியர் கடன் மீதியொன்று வைப்புக் கணக்கில் இருப்பதை தீர்த்த போது ஊழியர் கடன் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மிகைகள் மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 298,800 தொகை பெறுமதியான இயந்திர மற்றும் இயந்திர உபகரண இரண்டு விடயங்களின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 190,561 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவுகள் 23 மற்றும் 24 | சபைக்குச் சொந்தமான பாதைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பாதைப் பதிவேடொன்று தயாரித்திருக்கவில்லை. | பாதைப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை என. | அதிகார சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | 02 வாகனங்களின் விபத்துகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 76,522,030 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 23,899,888 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,191,041 | 4,810,368 | 4,402,458 | 9,148,681 | 5,900,000 | 4,997,592 | 5,208,815 | 8,740,771 |
| வாடகை | 46,765,970 | 51,909,200 | 51,995,395 | 220,211 | 21,913,000 | 5,459,415 | 5,498,815 | 306,406 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,200,362 | 761,565 | 761,565 | - | 567,360 | 344,026 | 363,526 | - |
| ஏனைய வருமானங்கள் | 13,629,580 | 21,940,883 | 20,188,409 | 2,025,350 | 9,751,350 | 11,977,830 | 11,724,957 | 272,876 |
| மொத்தம் | 67,786,953 | 79,422,016 | 77,347,827 | 11,394,242 | 38,131,710 | 22,778,863 | 22,796,113 | 9,320,053 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி மீதி ரூபா 8,740,771 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிலுவை மீதி ரூபா 9,148,681 தொகையாக இருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 14 கடையறைகளின் ஒரே தடவையில் பெறும் பணம் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை 2022 நவம்பர் 25 திகதி முடிவடைந்திருந்த போதிலும், ரூபா 11,923,729 தொகைக்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கு 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 956,775 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 115,106,786 தொகை பெற வேண்டியிருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் சேதனப் பசளை செயற்களத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என. | அனுமதிப்பத்திரம் பெற்றுகொள்ள வேண்டும். |
| (ஆ) | சேதனப் பசளை உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 ஏக்கர் 03 ரூட் 37.5 பர்சஸ்களை கொண்ட காணியில் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணியின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் சபைக்கு வழங்கியிருந்த 125 கட்டிட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக அங்கீகரித்தல் அல்லது புறக்கணித்தல் மற்றும் பின்தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை பூர்த்தி செய்யாவிடின் குறிப்பிட்ட கோப்புக்களை மூடுவதாக குறிப்பிட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டது என. | கட்டிட விண்ணப்பப் பத்திரங்களுக்காக பின்தொடர் செயல் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 952,000 தொகை பெறுமதியான 02 கப் | அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக |

| | | | |
|---|---|---|---|
| | வண்டிகள் நீண்ட காலமாக ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு காணப்படுவதுடன், அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை செயற்பாட்டுக்கு புறம்பாக களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 830,000 தொகை பெறுமதியான 1000 CFL மின்குமிழ்கள் ஆவணப்படுத்தியிருக்கவில்லை. | கூறுவிலை அழைக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டதென. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், செய்பணிகள் மற்றும் மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடிநீர் வசதிகள் வழங்குவதற்காக ரூபா 4,250,000 இற்கான 03 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தரிசு வயல்களை பயிர்ச்செய்தல் செயற்திட்டம் 2022 இன் கீழ் கால்வாய்களை மறுசீரமைத்தலின் கீழ் கால்வாய்களின் களிமண் அகற்றும் 06 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 387,016 தொகையும் நீர்த்தாவரம் மற்றும் வண்டல் மண் அகற்றும் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 359,464 தொகையும் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட தரவுகள் சரியானவை அல்ல என. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், மிகை கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள, இறந்துள்ள, சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 05 உத்தியோகத்தர்களிடம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 213,457 இற்கான கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை என. | நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |